## நீலகிரியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று களஆய்வு மேற்கொள்கிறார்!

# கோவை சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு மேளதாளம் முழங்க மகத்தான வரவேற்பு!

## அமைச்சர்கள் – எம்.பி.க்கள் – எம்.எல்.ஏ.க்கள் – கழகத்தினர் வரவேற்றனர்!

உதகை, ஏப். 6-

நீலகிரி மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக சென்றுள்ள முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு, கோவை விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப் பட்டது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நீலகிரி மாவட்டத்தில் இன்றும், நாளையும் கள ஆய்வு மேற் கொள்கிறார். அதன்படி, சிம்லாவுக்கு அடுத்தப்படியாக மலைப் பிரதேசத்தில் கட்டப்பட்டுள்ள இரண்டாவது மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை உதகையில் நாளை திறந்து வைக்கிறார். மேலும், உதகையில் 494 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,703 முடிவுற்ற பணிகளை திறந்து வைக்கும் முதலமைச்சர், 130 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 56 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்ட உள்ளார். 15 ஆயிரத்து 634 பயனாளிகளுக்கு 102 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான, நலத்திட்ட உதவிகளையும் வழங்க உள்ளார். இந்நிலையில், நீலகிரி மாவட்டத்தில் கள ஆய்வு மேற் கொள்வதற்காக சென்னையிலிருந்து விமானம் மூலம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கோவை சென்றார். இதையடுத்து, கோவை விமான நிலையத்தில், மேளதாளம் முழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் திமுக துணை பொதுச்செயலாளர்கள் ஆ.ராசா, அந்தியூர் செல்வராஜ், அமைச்சர்கள் செந்தில் பாலாஜி, மு.பெ.சாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணபதி ராஜ்குமார், ஈஸ்வரசாமி, திருப்பூர் மேயர் செல்வராஜ், திருப்பூர் மாவட்ட செயலாளர் பத்மநாபன், மேயர் ரங்கநாயகி, முன்னாள் ஒன்றிய அமைச்சர் கண்ணப்பன், முன்னாள் அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமி, முன்னாள் எம்.பி. நாகராஜ் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**உதகையில் ரூ.102.17 கோடியில் 15,634 பேருக்கு நலத்திட்ட உதவிகள்!**

முதலமைச்சர் அவர்கள் நீலகிரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை உள்ளிட்ட 1,703 முடிவுற்ற திட்டப்பணிகளை ரூ.494.51 கோடி மதிப்பீட்டில் திறந்து வைத்து, ரூ.130.35 கோடி மதிப்பீட்டில் 56 புதிய வளர்ச்சித் திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.102.17 கோடி மதிப்பீட்டில் 15,634 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் இன்று வழங்குகிறார்.

இது பற்றிய விவரம் வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு முழுவதும் மாவட்டங்கள் தோறும் கள ஆய்வு மேற்கொண்டு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறார். அதன் அடிப்படையில், நீலகிரி மாவட்டத்தில் இன்று (6.4.2025) உதகை அரசு கலைக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் அரசு விழாவில் கலந்து கொண்டு, சிறப்பிக்க உள்ளார்கள்.

இவ்விழாவில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நீலகிரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை உள்ளிட்ட 1,703 முடிவுற்ற ரூ.494.51 கோடி மதிப்பீட்டில் திட்டப்பணிகளை திறந்து வைத்து, ரூ.130.35 கோடி மதிப்பீட்டில் 56 புதிய வளர்ச்சித் திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.102.17 கோடி மதிப்பீட்டில் 15,634 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்க உள்ளார்கள்.

இவ்விழாவில், அமைச்சர் பெருமக்கள், மாவட்ட ஆட்சித்தலைவர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

---

## தொகுதி மறுவரையறை

# ஜனநாயக அமைப்பையே கலைத்துப் போடும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ‘Financial Times’ கட்டுரையை சுட்டிக்காட்டி சமூக வலைதளப்பதிவு!

சென்னை, ஏப்.6-

தொகுதி மறுவரையறை ஜனநாயக அமைப்பையே கலைத்துப் போடக்கூடும் என்பதை Financial Times கட்டுரை அம்பலப்படுத்துகிறது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அக்கட்டுரையை சுட்டிக்காட்டி சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

இது குறித்து நியாயமான தொகுதி மறுவரையறை குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**வடக்கின் மக்கள்தொகைப் பெருக்கம் தென்னகத்தின் குரலை அடக்குவதற்கான அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தப்படக் கூடாது!**

**தற்போதைய மக்கள் தொகை அடிப்படையிலான தொகுதி மறுவரையறை என்பது மக்கள் தொகை தொடர்பான ஒன்றியத்தின் இலக்குகளை நோக்கிய எங்களது பெருமுயற்சிகளுக்குத் தண்டனையை வழங்கும், கூட்டாட்சியின் நியாயத்தைச் சிதைக்கும் மோசமான வழிமுறையாகும்.**

**இது இந்திய ஜனநாயக அமைப்பையே எந்த அளவுக்குக் கலைத்துப் போடக்கூடும் என்பதை Financial Times கட்டுரை அம்பலப்படுத்துகிறது.**

**நாங்கள் கோருவது உண்மையாகவே நியாயமானதொரு தொகுதி மறுசீரமைப்பு.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---




# தி.மு.க. இளைஞர் அணி

## இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாகப் புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும், ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு, இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 06.04.2025 | திருச்சி வடக்கு | துறையூர் | வடக்குத் தெரு, நால் ரோடு, ந.குணசீலன் தெரு | முனைவர் **இரா.தி.சபாபதி மோகன்**, அ.சார்மதி |
| 2 | 06.04.2025 | கிருஷ்ணகிரி கிழக்கு | பர்கூர் | போச்சம்பள்ளி | **நாஞ்சில் சம்பத்**, கு.முரளிகிருஷ்ணன் |
| 3 | 06.04.2025 | திண்டுக்கல் கிழக்கு | நிலக்கோட்டை | மதுரை ரோடு, வத்தலகுண்டு | ராஜகம்பீரன் அப்பாஸ், துரை தினகரன் |
| 4 | 07.04.2025 | நாமக்கல் மேற்கு | குமாரபாளையம் | சேலம் சாலை, குமாரபாளையம் | **திருச்சி சிவா** எம்.பி., கா.பிரதீபா |
| 5 | 07.04.2025 | கன்னியாகுமரி கிழக்கு | நாகர்கோவில் | அறிஞர் அண்ணா விளையாட்டரங்கம் அருகில், வடசேரி | வழக்கறிஞர் ராஜீவ் காந்தி, ஜெ.ஜெபின் |
| 6 | 07.04.2025 | சென்னை வடக்கு | இராயபுரம் | பாலு முதலி தெரு, இராயபுரம் | பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், அ.தா.டெக்சின் ரொமேரியோ |
| 7 | 08.04.2025 | புதுக்கோட்டை வடக்கு | கந்தர்வக்கோட்டை | பேருந்து நிலையம் அருகில், கந்தர்வக்கோட்டை | தமிழ் கா.அமுதரசன், இ.நேரு |
| 8 | 11.04.2025 | கடலூர் கிழக்கு | கடலூர் | கடலூர் | **திருச்சி சிவா** எம்.பி., கு.அஷ்வின் |
| 9 | 12.04.2025 | நாமக்கல் மேற்கு | திருச்செங்கோடு | தேவனாங்குறிச்சி, திருச்செங்கோடு | பேராசிரியர் **சுப.வீரபாண்டியன்**, க.நந்தகுமார் |
| 10 | 12.04.2025 | கரூர் மாவட்டம் | குளித்தலை | தோகை மலை | செந்தில்வேல், வே.குணஸ்ரீ |
| 11 | 12.04.2025 | கள்ளக்குறிச்சி தெற்கு | கள்ளக்குறிச்சி | வானவரெட்டி ஊராட்சி | சூர்யா கிருஷ்ணமூர்த்தி, ஆ.ஷர்மிளா |
| 12 | 12.04.2025 | கள்ளக்குறிச்சி தெற்கு | ரிஷிவந்தியம் | மேல் சிறுவளூர் கூட்டுரோடு | மருத்துவர் ப.மீ.யாழினி, ச.ஐஸ்வர்யா |
| 13 | 19.04.2025 | கடலூர் கிழக்கு | புவனகிரி | கம்மாபுரம் | எழுத்தாளர் வே.மதிமாறன், ர.கோமதி |
| 14 | 20.04.2025 | கடலூர் கிழக்கு | குறிஞ்சிப்பாடி | குள்ளஞ்சாவடி | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, நா.சத்தியப்பிரியன் |
| 15 | 26.04.2025 | கடலூர் கிழக்கு | சிதம்பரம் | பரங்கிப்பேட்டை | **நாஞ்சில் சம்பத்**, க.செல்வமணி |
| 16 | 27.04.2025 | கடலூர் கிழக்கு | காட்டுமன்னார்கோயில் | திருமுட்டம் | வழக்கறிஞர் ராஜீவ் காந்தி, க.தமிழ்மணி |

அன்பகம், சென்னை – 18.
நாள் : 04–04–2025.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி